பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை 27.11.2022 கதிர் 274

## முதல் மாவீரரான சங்கருக்கு அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் லெப். சங்கருக்கு அவரது பூர்வீக இல்லத்தில் அஞ்சலி செலுத்தப் பட்டது. (8)

# மாவீரர்களுக்கு விழிநீரால் விளக்கேற்ற துயிலும் இல்லங்கள் தயார் நிலையில்

## தமிழர் தாயகமெங்கும் இன்று மாலை அஞ்சலி







**தமிழீழத் தனியரசு அமைப்பதற்காக - தனிநாட்டுக்காக - தமிழ் மக்களின் விடுதலைக்காக - இறுதி மூச்சுவரைப் போராடி - களமாடி வீரச்சாவைத் தழுவிய வீரமறவர்களை - மாவீரர்களை, தமிழீழ மண்ணின் காவிய நாயகர்களை - தேசத்தின் காவல் தெய்வங்களை, தமிழர்கள் உணர்வுடன் பூசிக்கும் மாவீரர் நாள், தாயக தேசத்தில் இன்று மாலை உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்படவுள்ளது.** (2)

## கண்ணீரும் செந்நீரும் கலந்த நந்திக்கடலில் மாவீரர்களுக்கு இன்று மலர்தூவி அஞ்சலி



தாயக விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்காக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்று காலை நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத் திய பின்னர் ஊடகங்களுக்கு ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல்.

ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் (2)

## மாவீரர் வளைவுகளையும் கொடிகளையும் அறுத்து முல்லையில் பொலிஸ் அராஜகம்



மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று மாலை நடைபெறவுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில துயிலும் இல்லங்களுக்குச்சென்ற பொலிஸார் ஏற்பாட்டாளர்களுக்கு (8)

## நினைவேந்தல் உரிமையை தட்டிப் பறிக்கவே முடியாது

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



ஒவ்வொருவரும் தமது உயிரிழந்த அன்புக்குரிய உறவுகளை அமைதியாக நினைவுகூருவதற்கு முழு உரிமை உள்ளது. அதனை யாரும் தட்டிப்பறிக்க முடியாது.

–இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (2)

## பண்டிதருக்கு அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதி மாவீரர் கப்டன் பண்டிதரின் பூர்வீக இல்லத்தில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்., வடமராட்சி – வல்வெட்டித்துறை கம்பர்மலையில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில், மாவீரர் பண்டிதரின் தாயார் (8)


## 30 பிரதான இடங்களில் இன்று மாவீரர் நிகழ்வு



(8)

தமிழர் தாயகத்தில் 30 பிரதான இடங்களில் இன்று மாலை மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படவுள்ளது. (2)

## பொலிஸ் புலனாய்வாளர்களுடன் சிறீதரன் எம்.பி. கடும் வாக்குவாதம்



சிறுவனின் கைத்தொலைபேசியைப் பறித்த பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அத்துடன் கைத்தொலைபேசியையும் சிறுவனிடம் மீளப்பெற்றுக்கொடுத்தார். (2)

## மாவீரர்களுக்கு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவீரர் துயிலும் இல்லங்கள் அல்லது துயிலும் இல்லங்களுக்கு அருகில் அமைந்துள்ள நிலப்பரப்புகளில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த இடங்கள் மாவீரர்களுக்கு விழிநீரால் விளக்கேற்றத் தயார் நிலையில் உள்ளன.

மாலை 6:05 இற்கு நினைவு ஒலி எழுப்பப்படும். 6:06 இற்கு அகவணக்கம் செலுத்தப்படும். 6:07 இற்கு ஈகைச்சுடர் ஏற்றப்படும்.

மாவீரர் நாளை தாயக தேசம் எழுச்சியுடன் இந்த ஆண்டு கடைப்பிடிக்கின்றது. வீதிகள் எங்கும் சிவப்பு – மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப்பறக்கின்றன. மாவீரர் அலங்கார வளைவுகள் மிடுக்குடன் அமைக்கப்பட்டுள்ளன. மின் அலங்கார விளக்குகளால் மாவீரர் துயிலும் இல்லங்கள் ஒளியூட்டப்பட்டுள்ளன. துயிலும் இல்லங்கள் அல்லது அதற்கு அருகில் மாவீரர் நாளைக் கடைப்பிடிக்கும் இடங்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணிகளில் சிறுவர்கள், பெரியோர் என அனைவரும் பேரார்வத்துடன் பங்கேற்றனர்.

### மாவீரர் நாள்

தமது உயிருக்கும் மேலாக தேசத்தின் விடுதலையை அதியுன்னதமாக நேசித்து அந்த உயரிய இலட்சியத்துக்காக சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை போற்றி வணங்கும் நன்நாள் இன்று. ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக – எரி நட்சத்திரங்களாக எரிந்தவர்களை நினைவுகூரும் நன்நாள்.

தமிழனத்தின் இருப்புக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமான வர்களை தமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நிறுத்தி தமிழர்கள் நினைவு கூரும் நாள். தமிழர் தாயகம் சுதந்திரத் தாகம் கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். தமிழர் தாயகத்தின் விடிவுக்காகவும் தமிழர் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய வீரர்களை தமிழர்கள் தம் இதயக் கோயில்களில் நிறுத்தி பூசிக்கும் நாள்.

எதனையும் தாங்கும் இதயத்துடன் சாவுக்கு அஞ்சா வீரத்துடன் சாவைத் தழுவியவர்கள் தான் மாவீரர்கள். அவர்கள் துயிலும் இல்லங்கள் தாயகத் தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அல்லது சீரழிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் தரைமட்டமாக்கப்பட்ட துயிலும் இல்லங்களின் எச்சங்களை மீட்டெடுத்து இன்றைய மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தமிழர் தேசம் தயாராகியுள்ளது.

இராணுவத்தினரால் சில பல கெடுபிடிகள் ஏற்படுத்தப்பட்டாலும், சட்டரீதியான தடை உத்தரவுகள் எதுவும் இல்லாமையால் கடந்த காலங்களை விட பெரும் எடுப்பிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 30 பிரதான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

01. கோப்பாய் துயிலும் இல்லம்
02. சாட்டி துயிலும் இல்லம்
03. உடுத்துறை துயிலும் இல்லம்
04. கொடிகாமம் துயிலும் இல்லம்
05. எள்ளங்குளம் துயிலும் இல்லம்
06. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

**கிளிநொச்சி மாவட்டம்**

07. கனகபுரம் துயிலும் இல்லம்
08. முழங்காவில் துயிலும் இல்லம்

**முல்லைத்தீவு மாவட்டம்**

09. ஆலங்குளம் துயிலும் இல்லம்
10. வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லம்
11. கோடாலிக்கல்லு (டிடி முகாம்) துயிலும் இல்லம்
12. முள்ளியவளை துயிலும் இல்லம்
13. அளம்பில் துயிலும் இல்லம்
14. முல்லைத்தீவு கடற்கரை
15. முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லம்
16. இரட்டைவாய்க்கால் துயிலும் இல்லம்
17. பச்சைபுல்மோட்டை துயிலும் இல்லம்
18. இரணைப்பாலை துயிலும் இல்லம்
19. தேவிபுரம் துயிலும் இல்லம்
20. தேராவில் துயிலும் இல்லம்

**மன்னார் மாவட்டம்**

21. ஆட்காட்டி வெளி துயிலும் இல்லம்
22. பண்டிவிரிச்சான் துயிலும் இல்லம்

**வவுனியா மாவட்டம்**

23. ஈச்சங்குளம் துயிலும் இல்லம்
24. நகர சபை மண்டபம்

**மட்டக்களப்பு மாவட்டம்**

25. தரவை துயிலும் இல்லம்
26. வாகரை துயிலும் இல்லம்
27. மாவடி முன்மாரி துயிலும் இல்லம்
28. தாண்டியடி

**அம்பாறை மாவட்டம்**

29. கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம்

**திருகோணமலை மாவட்டம்**

30. சம்பூர் ஆலங்குளம் துயிலும் இல்லம்

## கண்ணீரும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, தாயக விடுதலைக்காக உயிர்நீத்த எங்கள் மாவீரர் செல்வங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளேன் – என்றார்.

## நினைவேந்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'நவம்பர் 27ஆம் திகதி நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்கு வடக்கு – கிழக்கில் பகிரங்கமாக ஏற் பாடுகள் நடக்கின்றன. இதற்கு உங்கள் அரசு அனுமதி வழங்கியிருக்கின்றதா?' என்று சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர், ஜனாதிபதி ரணிலிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனநாயக நாடு. நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது. ஒவ்வொரு இனமும் இறந்த தமது உறவுகளை அமைதியாக நினைவேந்த முழு உரிமை உண்டு. இதைவிட வேறு எந்தக் கேள்வியும் தற்போதைய நிலைமையில் அவசியமற்றது – என்றார்.

## பொலிஸ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வன்னேரிக்குள வட்டாரத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வைக் காணொளிப் பதிவாக்கிய சிறுவனின் கைத்தொலைபேசியைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் பறித்தனர்.

இதைக் கண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதுடன் கைத் தொலைபேசியையும் குறித்த சிறுவனிடம் மீளப் பெற்றுக்கொடுத்தார்.

விளம்பரத்திற்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## என்ன பேசி இருப்பர்?

இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் தலைவர் கொழும்பு வந்து திரும்பிய செய்தி வார இறுதி ஆங்கிலப் பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடித்திருக்கின்றது.

அவர் இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவையும் சந்தித்தார் என்றும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

என்ன பேசினார், ஏது பேசினார், அரசியலில் ஓரங்கட்டப்பட்டிருக்கும் பஸில் ராஜபக்ஷவை ஏன் சந்தித்தார் என்பவை தொடர்பாக எல்லாம் பல கேள்விகள் ஊடக வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் உத்தியோகபூர்வமாக யாரும் பதில் தரப்போவதில்லை. சம்பந்தப்பட்ட வட்டாரங்களும் வாய் திறக்கப் போவதில்லை. எனவே பேச்சின் விவரங்கள் வெளிவராவிட்டாலும், நிகழ்வுகளை ஒட்டி என்ன பேசப்பட்டு இருக்கும் என்பதை ஊகிப்பது அப்படி ஒன்றும் சிக்கலான விடயமாக இருக்கப் போவதில்லை.

காரணம் இன்றி காரியங்கள் இல்லை அல்லவா?

வழமைக்கு மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வார முப்பகுதியில் நாடாளுமன்றத்தில் ஆக்ரோஷமான பேச்சு ஒன்றை நிகழ்த்தினார். அதனை செவிமடுத்த பலரும் ஜனாதிபதி ரணில், தம்மை ஓர் இராணுவ சர்வாதிகாரியாக மாற்றிக் கொண்டு விட்டாரோ என்று சந்தேகப்படவும் தவறவில்லை.

'அரசாங்கத்தை வீழ்த்த இனி ஒரு போராட்டத்திற்கு இடம் அளியேன். வீதிக்கு இறங்கினால் இராணுவமும் இறங்கும்; அவசர காலச் சட்டமும் பாயும்' என்ற சாரப்பட முழங்கினார் ஜனாதிபதி.

அரசாங்கத்தைக் கவிழ்க்க இனியொரு 'அறகலைய' போராட்டத்தில் குதித்தீர்களானால் அதனை இரும்புக்கரம் கொண்டு அடக்கப் பின்னிற்க மாட் டேன் என்ற ஜனாதிபதி ரணிலின் இந்த ஆவேசப் பேச்சு வார முற்பகுதியில் 'றோ' அமைப்பின் தலைவருடனான சந்திப்பின் பின்னர் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

அதே பின்புலத்தில் தான் பஸிலுடனான அந்தச் சந்திப்பும் நடந்திருக்கின்றது. இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்து ஊகிப்பது கஷ்டமானது அல்ல.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட 'அறகலைய – 1' போராட்டத்தின் பின்னணியில் 'சிவப்பு சட்டைகளும்' அதையொட்டிய நாடுகளும் இருந்தன என்பது யாவரும் அறிந்ததே.

உத்தேச 'அறகலைய –2' பற்றிய எச்சரிக்கையே இப்போது ரணிலுக்கும் பஸிலுக்கும் இச் சந்திப்பின்போது முக்கியமாக வழங்கப்பட்டிருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

மொட்டுக் கட்சிக்குள் பஸில் முன்னெடுக்கும் அலப்பறை அதிகம். ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, மஹிந்தானந்த அளுத்கமகே போன்றோருக்கு அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்ற அழுத்தம் ரணிலுக்கு அரசியல் நெருக்கடிகளை தருபவை.

அதற்குப் பணிந்து அவற்றை ரணில் முன்னெடுத்தால், தென்னிலங்கையில் அரசியல் அதிருப்தி உச்சம் பெற்று, மீண்டும் அறகலைய வெடிக்கும் சூழல் உருவாகும். அது இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பி விட விரும்பும் சிவப்பு நாடுகளுக்கு, சிவப்புக் கம்பளம் விரிப்பதாகிவிடும். ஆகவே எச்சரிக்கையாக நடவுங்கள் என்ற செய்தியே இரு தலைவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் என ஊகிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் கோரவிபத்து; ஒருவர் சாவு: ஐவர் காயம்!



மட்டக்களப்பு கிரான் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற இந்த விபத்தில் முறக்கொட்டன்சேனை தேவாபுரப்பகுதியைச் சேர்ந்த நல்லராசா நேசராசா (வயது – 46) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

முறக்கொட்டான்சேனை பகுதியில் இருந்து கிரான் நாகவத்தை கடற்கரைப் பகுதிக்கு மீன்பிடிப்பதற்காக ஐவர் உழவு இயந்திரத்தில் சென்ற நிலையில் பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிக்கு உழவு இயந்திரத்தை திருப்பும்போது பின்னால் வந்த கார் உழவு இயந்திரத்துடன் மோதியதில் உளவு இயந்திரத்தில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் கார் சாரதி மற்றும் உழவு இயந்திரத்தில் இருந்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

காரில் வந்தவர்கள் களுதாவளை ஆலயத்திற்கு பூஜை ஒன்றுக்கு வந்துள்ளார்கள் என தெரியவருகிறது.

காரின் சாரதி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனைய இருவர் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மேலும் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட் டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பரிசோத னையின் பின்னர் உறவினர்கள் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட் டுள்ளன.

வாழைச்சேனை பொலிஸார் மேலதிக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள்.

விபத்தில் சிக்கிய கார் மற்றும் உழவு இயந்திரம் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

# தன்மீது மனைவி பழி சுமத்தியதால் ஆண் உறுப்பை வெட்டிய கணவன்!

மனைவி தன்மீது வீண்பழி சுமத்தினார் என்பதற்காக அவரது கணவன் தனது ஆணுறுப்பைக் கூரிய ஆயுதத்தால் அறுத்துக் கொண்ட சம்பவம் ஒன்று பொல்பித்திகமவில் இடம்பெற்றுள்ளது.

பொல்பித்திகம பொலிஸ் பிரிவைச் சேர்ந்த குறித்த நபர், நேற்று (சனிக்கிழமை) மாலை வெளியே சென்று மீண்டும் வீட்டுக்குத் திரும்பியபோது அவரது மனைவி வழிதவறிய நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறி கணவர் மீது குற்றம் சுமத்தியபோது அவர் வீண் பழி சுமத்த வேண்டாம் என்று கூறியுள்ளார். பின்னர் அவர் தனது ஆணுறுப்பை வெட்டியுள்ளார். இந்தநிலையில், வெட்டுக் காயங்களுடன் பொல் பிதிகம வைத்தியசா லையில் சேர்க்கப்பட் டார்எனவும், மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய வழிகாட்டி இளைஞர் யுவதிகளுக்கான வலுவூட்டல் நிகழ்வு!




நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய வழிகாட்டி வலுவூட்டல் நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை யாழ். தீவகப் பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் காலை 11 மணி தொடக்கம் மதியம் 3 மணி வரை நடைபெற்றது.

இதன் போது தலைமைத்துவம் ,பால்நிலை சமத்துவம் ,ஒற்றுமை, குழு செயற்பாடு, விடாமுயற்சி ,போன்ற பயிற்சிகள் செயல்முறை விளக்கத்துடன் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதோடு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜுட்சன் பிகிராடோ, யாழ் தீவக வலயமைப்பின் நிர்வாகத்தினர், நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நிலவின் தென் துருவத்தில் தளம் அமைக்கத் தயாராகின்றது சீனா!



பீஜிங்,நவ.27

அணு சக்தி உதவியுடன் நிலவில் விண்வெளி வீரர்களுக்கான தளம் ஒன்றை 6 ஆண்டுகளில் அமைக்க சீனா திட்டமிட்டு உள்ளது.

பூமியில் மக்கள் தொகை பெருகி வரும் நிலையில், இடப்பற்றாக்குறையை போக்கும் வகையில் பூமி தவிர்த்து வேறு கிரகங்களில் மனிதர்கள் வசிப்பதற்கான சூழலை தேடும் ஆராய்ச்சியில் பல்வேறு நாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றில், நிலவு மற்றும் பூமியின் அருகேயுள்ள செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வியலுக்கான சூழல் பற்றிய ஆராய்ச்சியாளர்களின் தேடல் நீண்டுள்ளது.

இதன்படி, அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பு நிலவுக்கு கடந்த 1972 ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்களை அனுப்பியது. அதன்பின் கடந்த 50 ஆண்டுகளாக நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் பரிசோதனை முயற்சி தொடர்ந்து வந் தது. இதன்படி, வருகிற 2025 ஆம் ஆண் டுக்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது. இதற்கு ஆர்டெமிஸ் என்ற ராக்கெட் அனுப்பும் திட்ட ஆராய்ச்சியில் இறங்கியது. இதன் பயனாக, சமீபத் தில், ஆட்களின்றி ஆர்டெமிஸ்-1 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

அதனுடன் இணைந்த ஆரியன் விண்கலம் நிலவின் மேற்பரப்பில் ஆய்வு பணியில் ஈடுபட உள்ளது. எனினும், ஆர் டெமிஸ்-2 திட்டத்தில் விண்வெளி வீரர் களை அனுப்ப திட்டமிடப்பட்டு உள்ளது.

விண்வெளி துறையில் நாசா அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், அதற்கு சவாலாக அடுத்த சில ஆண்டு களில் தனது விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்ப சீனா திட்டமிட்டு உள்ளது. இதன்படி வருகிற 2028 ஆம் ஆண்டுக்குள் தனது முதல் நிலவு தளம் ஒன்றை அமைக்க சீனா திட்டமிட்டு உள்ளது. இந்த தளம், அணு சக்தி உதவியுடன் இயங்க கூடிய வகையில் இருக்கும் என்று கெய்க்சின் என்ற செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது. இந்த தளத்தில், லேண்டர், ஹாப்பர், ஆர்பிட்டர் மற்றும் ரோவர் ஆகியவை இடம் பெறும்.

இதுபற்றி சீனாவின் நிலவு பயண திட்டத்தின் தலைமை வடிவமைப்பாளரான வூ வெய்ரான் கூறும்போது, இன்னும் 10 ஆண்டுகளில் எங்களது விண்வெளி வீரர்கள் நிலவுக்கு பயணம் செய்ய முடியும். நிலவு நிலையத்தில் நீண்டகால மற்றும் அதிக சக்திக்கு தேவையான ஆற்றலை அணு சக்தி பூர்த்தி செய்யும் என்று சீனாவில் இருந்து வெளிவரும் அரசு தொலைக்காட்சியான சி.சி.டி.வி.யில் அளித்த பேட்டியில் வெய்ரான் கூறியுள்ளார். சமீப ஆண்டுகளாக, விண்வெளியில் தனது நோக்கங்களை செயல்படுத்தும் பணியில் தீவிரமுடன் சீனா ஈடுபட்டு வருகிறது. நிலவில் ஆராய்ச்சி பணி, சொந்த விண்வெளி நிலையம் அமைப்பது மற்றும் செவ்வாய்க்கு செல்வதற்கான இலக்கு ஆகியவற்றை நிர்ணயித்து செயல்படுகிறது. சீனாவின் திட்டம் அமெரிக்காவுக்கு நேரடி போட்டியாக காணப்படுகிறது.

நாசா விண்வெளி அமைப்பு ஒன்றும் சளைத்ததல்ல. அது, செவ்வாய் கிரகத்தில் விண்கலம் ஒன்றை வைத்திருக்கிறது. இந்த தசாப்தத்திற்குள், நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பவும் நாசா திட்டமிட்டு உள்ளது. நிலவில் மனிதர்களை இறக்குவது தவிர, நிலவின் மேற்பரப்பில் உயிர் வாழ்வதற்கான வளங்களை முதலில் பெறுவது அல்லது செவ்வாய் கிரகத்திற்கு விண்கலம் அனுப்புவது என அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் கோடிக்கணக்கான டொலர் மதிப்பிலான தொகையை செலவிட்டு வருகிறது.

2019 ஆம் ஆண்டில் நிலவின் மறுபுறம் விண்கலம் அனுப்பிய முதல் நாடாக சீனா உருவானது. அதன்பின்னர், நிலவில் இருந்து மாதிரிகளை பூமிக்கு கொண்டு வந்த முதல் நாடு என்ற பெருமையையும் சீனா பெற்றது. இந்த நிலையில், நிலவின் தென் துருவத்தில், நீரை கண்டறிவதற்கான சிறந்த பகுதி என விஞ்ஞானிகள் நினைக்கும் பகுதியில் சீனாவின் நிலவு தளம் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

நாசா அமைப்பும் அந்த பகுதியை தனது இலக்காகவே வைத்துள்ளது. சீனாவின் இந்த தளம் பின்னர் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் ஆக விரிவாக்கம் செய்யப்படுவதற்கான இலக்கையும் சீனா கொண்டுள்ளது.

எது எப்படியோ, உலக நாடுகளில் ஏதேனும் ஒன்று, பூமி தவிர்த்து வேற்று கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிந்து அதனை செயல்படுத்தும் இலக்கு நிறைவேறினால், அது மனித குலத்தின் புதிய சாதனையாக பார்க்கப்படும்.

## ஆஸி கடற்கரையில் 2,500 பேர் நேற்று நிர்வாணமாக திரண்டனர்

சிட்னி,நவ.27

தோல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுக்காக ஆஸ்திரேலிய கடற்கரையில் 2,500 பேர் நிர்வாணமாக திரண்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

உலக அளவில் தோல் புற்றுநோயால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக ஆஸ்திரேலியா உள்ளது. அங்கு ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கானோர் தோல் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என உலக புற்றுநோய் ஆராய்ச்சி நிதியம் கூறுகிறது.

இந்தநிலையில் ஆஸ்திரேலியாவில் கடந்த ஒரு வாரமாக தோல் புற்றுநோய் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஆஸ்திரேலிய மக்கள் வழக்கமான தோல் பரிசோதனைகளை செய்து கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக அந்த நாட்டின் சிட்னி நகரில் உள்ள போண்டி கடற்கரையில் நேற்று காலை வழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் ஆண்கள், பெண்கள் என சுமார் 2,500 தன்னார்வலர்கள் பங்கேற்றனர். அவர்கள் சூரிய உதயத்தின்போது கடற்கரை முன்பு நிர்வாணமாக நின்று தோலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



## மகளைத் தம் அரசியல் வாரிசாக்க தயாராகிறார் வட கொரிய அதிபர்



சியோல்,நவ.27

வடகொரியாவின் எதிர்கால அரசியல் தலைவராக மகளை அறிமுகப்படுத்தத் தயார் செய்வதற்கான முன்னோட்டமாக கிம் ஜாங் அன் மகளுடன் பொதுவெளியில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் எனக் கூறப்படுகிறது.

வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன் கடந்த சில தினங்களுக்கு முன்பாக முதல் முறையாக தனது மகளை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்தினர். தனது நாட்டைப்போலவே தனது தனிப்பட்ட வியங்கள் குறித்தும் இரகசியம் காத்து வரும் வடகொரியா அதிபர் கிம் ஜான் அன், முதல் முறையாக தனது மகளான ஜு ஏவுடன் வருகை தந்தமை உலக அளவில் கவனம் பெற்றது. வடகொரியாவின் எதிர்கால அரசியல் தலைவராக மகளை அறிமுகப்படுத்தத் தயார் செய்வதற்கான முன்னோட்டமாக கிம் ஜாங் அன் மகளுடன் பொதுவெளியில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில், இரண்டாவது முறையாக கிம் ஜாங் அன் தனது மகள் ஜு ஏவுடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன.

ஏவுகணை விஞ்ஞானிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தின் போது தனது மகளுடன் கிம் ஜாங் அன் பங்கேற்று இருக்கிறார். 9 அல்லது 10 வயது இருக்கலாம் என்று கருதப்படும் ஜுஏ, கிம் ஜாங் அன் மிகவும் நேசத்திற்குரிய மகள் என்று வடகொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

கிம் ஜாங் அன்னுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கலாம் என்று தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஒரு மகன், இரு மகள்கள் இருக்கக் கூடும் என்றும் தற்போது பொதுவெளியில் தெரியவந்து இருப்பது கிம் ஜாங் அன்னின் 2 ஆவது மகள் என்றும் தென்கொரிய ஊடகங்கள் கூறுகின்றன.

# ஆஸ்திரேலிய – இந்தியப் படைகள் ஒன்றிணைந்து ‘ஆஸ்திராஹிந்த்–2022’ கூட்டு இராணுவப் பயிற்சி




## இன்று முதல் 15 நாள்கள் ராஜஸ்தானில் முன்னெடுப்பு

புதுடெல்லி,நவ.27

ஐ.நா. உத்தரவின் பேரில் உலக நாடுகளின் அமைதி பாதுகாப்பு நோக்கத்திற்காக இந்திய – ஆஸ்திரேலிய இராணுவங்கள் இன்று முதல் 15 நாள்கள் கூட்டு பயிற்சியில் ஈடுபடுகின்றன. உலகளவில் பல்வேறு நாடுகள் போர் சூழலை எதிர்கொண்டுள்ளன. இவற்றில் உக்ரைனின் மீது ரஷியாவின் படையெடுப்பு சமீப நாகளாக உலக நாடுகளால் வேடிக்கை பார்க்கப்பட்டு வருகிறது. இது தவிர ஒரு தசாப்தத்திற்கும் கூடுதலான நீண்டகால போர்களாக சிரியா, லிபியா உள்நாட்டு போர் காணப்படுகிறது.

அவ்வப்போது கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு குடிமக்கள் மற்றும் வீரர்களை தாக்கும்நிகழ்வுகள்காணப்படுகின்றன. தவிர, பிற நாடுகளை பொருளாதார பலம் கொண்ட நாடுகள் அச்சுறுத்தும்சூழலும்காணப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக சீனா –தைவான் விவகாரம் பார்க்கப்படுகிறது. தற்காப்புக்காக அணு சக்தியை பெருக்கி கொள்ளும் நோக்கிலும் வடகொரியா போன்ற நாடுகள் செயல்பட்டு அண்டை நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இந்த நிலையில், எந்த நாடானாலும் போரை முடிவுக்கு கொண்டு வரும்படியும், அமைதி பேச்சுவார்த்தை வழியே தீர்வு காணும்படியும் ஐ.நா. அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எனினும், உள்நாட்டு போர், மறைமுக போர், நேரடி போர், நீண்டகால போர் என அது நீடித்து கொண்டே இருக்கிறது.

இந்த சூழலில், உலக நாடுகளின் அமைதியை பாதுகாக்கும் முயற்சியாக ஐ.நா. உத்தரவின் கீழ் இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய இராணுவங்கள் இணைந்து கூட்டு பயிற்சியில் ஈடுபட முடிவானது. இதன்படி,ன்று நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 11 ஆம் திகதி வரையிலான 15 நாள்கள் இந்த இராணுவக் கூட்டு பயிற்சி மேற்கொள்ளப்படும். இதற்காக ராஜஸ்தானில் இந்தியஈராணுவமும், ஆஸ்திரேலிய இராணுவமும் இணைந்து ஆஸ்திராஹிந்த்–2022 என்ற பெயரில் கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபடுகின்றன்.

இதற்கான தொடக்க விழா இன்று நடைபெற்றது. இந்த இராணுவ பயிற்சியில் வீரர்கள் மற்றும் சில வீராங்கனைகளும் பங்கேற்கின்றனர். அவர்கள் நீண்ட, பெரிய மற்றும் இயந்திர துப்பாக்கி சுடுதல், ஹெலிகொப்டரில் கயிறு வழியே ஏறி, இறங்குதல், தடைகளை கடந்து செல்லுதல் உள்ளிட்ட கடினம் வாய்ந்த பயிற்சி முறைகளை மேற்கொள்கின்றனர்.

## அறுபது பொலிஸாரின் பாதுகாப்புடன் உத்தரபிரதேசத்தில் நடந்த திருமணம்



பரேலி,நவ.27

ஒரு இன்ஸ்பெக்டர், 14 சப்–இன்ஸ்பெக்டர்கள், 44 பொலிஸ்காரர்கள், ஒரு வட்ட அதிகாரி என 60 பொலிஸார் ஒரு திருமணத்துக்கு பாதுகாப்பு அளித்தனர். பொலிஸார் துணையுடன் மணமகனின் குதிரை ஊர்வலம் நடந்தது. மேலும் மணமக்களுக்கு பொலிஸார் சார்பில் திருமண பரிசாக ரூ.11 ஆயிரம் வழங்கினர்.

உத்தரபிரதேச மாநிலம் லோஹமாய் கிராமத்தைச் சேர்ந்தவர் ராம்கின். இவருக்கும் ரவீனா என்பவருக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டது. தனது வருங்கால கணவர், குதிரையில் ஊர்வலமாக வர வேண்டும் என்று ரவீனா விரும்பினார். ஆனால் தலித்தான ராம் கின், ஊருக்குள் குதிரையில் ஊர்வலமாக செல்ல வேறு ஜாதியினர் எதிர்ப்பு தெரிவித்து கட்டுப்பாடுகளை விதித்தனர். இதனால் மணமகனின் குதிரை ஊர்வலத்தை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது. இதையடுத்து மணப்பெண் ரவீனாவின் உறவினர் ராஜேந்திர வால்மீகி, சம்பல் மாவட்ட பொலிஸிடம் மனு அளித்தார். அதில் இசை நிகழ்ச்சி மற்றும் குதிரையுடன் திருமண ஊர்வலத்தை சில ஜாதியினர் அனுமதிக்க மறுக்கிறார்கள்,எனவே எங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதையடுத்து மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டு சக்ரேஷ் மிஸ்ரா அந்த திருமணத்துக்கு பெரும் பொலிஸ் படையை பாதுகாப்புக்காக அனுப்பினார்.

ஒரு இன்ஸ்பெக்டர், 14 சப்–இன்ஸ்பெக்டர்கள், 44 பொலிஸ்காரர்கள், ஒரு வட்ட அதிகாரி என 60 பொலிஸார்திருமணத்துக்குபாதுகாப்பு அளித்தனர். பொலிஸார் துணையுடன் மணமகனின் குதிரை ஊர்வலம் நடந்தது. மேலும் மணமக்களுக்கு பொலிஸார் சார்பில் திருமணல் பரிசாக ரூ.11 ஆயிரம் வழங்கினர்.

இது தொடர்பாக மணப்பெண்ணின் உறவினர் ராஜேந்திர வால்மீகி கூறும்போது, கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த எனது மகள் திருமணத்தில் பிரச்சினை ஏற்படுத்தினர். எங்களது விருந்தினர்களை அவமானப்படுத்தினார்கள். இந்த முறை அவர்களை சமாதானப்படுத்த முயற்சி செய்தோம். ஆனால் அவர்கள் மீண்டும் எங்களது கோரிக்கையை ஏற்கவில்லை. ஊர்வலத்தை நடத்தினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று சிலர் மிரட்டல் விடுத்தனர். இதனால் பொலிஸ் உதவியை நாடினோம் என்றார். மணப்பெண் ரவீனா தாய் ஊர்மிளா கூறும்போது, என் மகள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாள். அவளது கனவை பொலிஸார் நனவாக்கி விட்டனர். அவர்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். – என்றார்.

## உலகிநலன் சார்ந்த சவாலான விடயங்களுக்கு இந்தியாவிடம் தீர்வு உள்ளது என்கிறார் மோடி




புதுடெல்லி,நவ.27

அமைதி, ஒற்றுமை அல்லது நீடித்த வளர்ச்சி போன்ற உலகளாவிய நலன் சார்ந்த சவாலான விடயங்களுக்கு இந்தியாவிடம் தீர்வு உள்ளது என இந்தியப் பிரதமர் மோடி உரையில் பேசியுள்ளார்.

பிரதமர் மோடி ஒவ்வொரு மாதக் கடைசி ஞாயிற்று கிழமைகளில் வானொலி வழியே மன் கி பாத் நிகழ்ச்சியில் மக்களுடன் உரையாற்றி வருகிறார். அதில், பல விடயங்களைப் பகிர்ந்து வருகிறார். இதன்படி இந்த மாதத்திற்கான மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி இன்று காலை கலந்து கொண்டு பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, 100 ஆவது மன் கி பாத் நிகழ்ச்சியை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்வதற்கான முக்கிய நிகழ்ச்சியாக இது உள்ளது என கூறினார்.

இந்தியா ஜி–20 தலைமைத்துவம் பெற்றதனால், நாடு முழுவதிலும் இருந்து மக்கள், அவர்கள் அடைந்த பெருமையை பற்றி எனக்கு கடிதம் எழுதுகின்றனர். அம்ரித் கால் திட்டத்தின் கீழ் இந்த வாய்ப்பை இந்தியா பெற்றது. இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஜி–20 தலைமைத்துவம் நமக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பம். உலகளாவிய நலன் சார்ந்த விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அது அமைதி, ஒற்றுமை அல்லது நீடித்த வளர்ச்சியாக இருக்கட்டும். அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கு இந்தியாவிடம் தீர்வு உள்ளது. நாம் ’ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே வருங்காலம்’ என்ற கருப்பொருளை கொண்டிருக்கிறோம் என்று பிரதமர் மோடி பேசியுள்ளார்.

## குஜராத் தேர்தல் பணியின் போது படையினரிடையே துப்பாக்கிச்சூடு

குஜராத்தேர்தல்பணியில்ஈடுபட்டிருந்தபடையினரிடையே துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இதில் துணை ராணுவ வீரர்கள் இருவர் உயிரிழந்தனர். துப்பாக்கி சூடு நடந்ததற்கான காரணம் பற்றி உடனடியாகத் தெரிய வரவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

குஜராத்தில் டிசம்பர் மாதம் முதலாம் திகதி, 5 ஆம் திகதி ஆகிய 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 3 நாள்களே இருக்கும் நிலையில் அனைத்து கட்சி தலைவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். தேர்தல் பாதுகாப்பு பணியில் துணை இராணுவ படையினர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட மணிப்பூரை சேர்ந்த இந்திய ரிசர்வ் பட்டாலியன் துணை இராணுவ படையினர், போர் பந்தலில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள துக்டா கோசா பகுதியில் உள்ள புயல் நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நேற்று இரவு துணைஈராணுவப் படையைச் சேர்ந்த வீரர்களுக்கு இடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது. அப்போதுராணுவ வீரர் ஒருவர் சக இராணுவ வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் 2 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். துப்பாக்கி சூட்டில் மேலும் 2ஈராணுவ வீரர்களுக்குக் காயம் ஏற்பட்டது. ஒருவருக்கு வயிற்றிலும், மற்றொருவருக்கு காலிலும் காயம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாக போர்பந்தலில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் இருவரும் மேல் சிகிச்சைக்காக ஜாம் நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

இந்தத் துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டவர் இனாவ்ச்சா சிங் என்று தெரியவந்தது. அவரை பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவருமே மணிப்பூரை சேர்ந்தவர்கள் ஆவர். இந்த மோதலுக்கான காரணம் என்ன என்று உடனடியாக தெரியவில்லை.



# கிழக்கு கலைஞர்கள் உருவாக்கிய சமூக விழிப்புணர்வு குறும்படங்கள்

## சாய்ந்தமருதில் வெள்ளியன்று வெளியீடு





(நூருல் ஹுதா உமர்)

சமூகத்தின் பிரச்சினைகளையும், கூடாத பழக்கங்களையும் மக்களுக்கு எடுத்துரைத்து சமூக மாற்றத்தை நோக்கி கிழக்கு மாகாண, அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்ட, தமிழ் பேசும் கலைஞர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்படம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாய்ந்தமருது அல்–ஜலால் வித்தியாலய மண்டபத்தில் திரையிடப்பட்டது.

இளம் இயக்குனர் எல்.எம். சாஜித் இயக்கத்தில் டொப்குயின் அட்வர்டைசிங் நிறுவன தயாரிப்பில் பிரபல கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் பிரதான நடிப்பில் வெளிவந்த இந்த நாடகங்கள் முதல் தொழுகை, பணத்திமிரு, பெண்தேவதை, குடிபோதை, வட்டியின் வினை போன்ற சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு திரையிடப்பட்டது.

மருதம் கலைக்கூடல் மன்றம் மற்றும் தெரு பசங்க தயாரிப்பு நிறுவனம் போன்றவற்றின் இணைத்தயாரிப்பில் வெளிவந்த இந்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்பட வெளியீட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் டீ.எம். ரின்ஸான், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதா உமர், அமானா நற்பணிமன்ற தலைவர் ஏ.எல்.ஏ. பரீட் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை நிகழ்த்தினர்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச கலாச்சார உத்தியோகத்தர்களான ஏ.எச்.சபிக்கா, எஸ். சுரேஷ் குமார், சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்க தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்வர் சதாத், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சுஹைல் அஸீஸ், மருதம் கலைக்

கூடல் மன்ற சிரேஷ்ட நிர்வாகிகள் உட்பட கலைஞர்கள், பிரதேச முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கசிப்பு உற்பதியாளர்கள் களுவாஞ்சிகுடியில் கைது

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் கசிப்பு மற்றும் கோடா என்பன சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக களுவாஞ்சிகுடி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, துரிதமாக செயற்பட்ட பொலிஸார் பெருமளவு கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றை கைப்பற்றி யுள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவங்கள் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட 6 பேரையும் சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது, கசிப்பு உற்பத்திற்கு பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



# போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதில் ஊடகவியலாளர் பங்களிப்பு பற்றி ஆராய்வு

## கல்முனையில் விசேட பயிற்சி பட்டறை






(நூருல் ஹுதா உமர்,
எம்.என்.எம்.அப்ராஸ்)

டயக்கோனியா சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையில், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில், போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு மற்றும் குடும்பத்தில் பெண்கள், சிறார்கள் மத்தியில் தாக்கம் குறித்து அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டளர்களுக்கான பயிற்சி பட்டறை கல்முனையில் இன்று இடம்பெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் மாவட்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல். ஹபீலா இணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ், உளவளத் துணை உத்தியோகத்தர் ஏ.பி.அப்துல் சுக்கூர் ஆகியோர் கலந்து கொண்டமையுடன் மேலும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட கணக்காளர் ஆர். அனுஸ்கா மற்றும் இளம் ஊடகவியலார்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் எதிர்கால நிகழ்வுகளை கருத்திற் கொண்டு இளம் ஊடகவியலாளர்கள் வலையமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செவித்திறன் பாதிப்பு மாணவருக்கு வருட நிறைவு நிகழ்வு திருமலையில்

(இரா. ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலை லிங்கநகரில் அமைந்துள்ள செவித்திறன் குறைபாடுடைய மாணவர்ளுக்கான ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் பணிப்பாளர் வரதசீலன் ஏற்பாட்டில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின்

கண்காணிப்பாளர் எஸ்.டபிள்யூ. தேவகுமாரின் ஆதரவில் நிகழ்வு நடைபெற்றது.

தலைமை விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் காதுகேளாதோருக்கான அமைப்பின் நிறுவுனர் எஸ். ஞானராஜாவும், கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி பிரதிப்பணிப்பாளர் ஆர்.நிமலஞ்சன், கிழக்கு மாகாண சிறப்பு கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜனாத்தனனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

தலைமை விருந்தினர் எஸ். ஞானராஜா உரையாற்றுகையில்–

மாற்றுத்திறனாளிகள் சமூத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்குள் இருக்கும் தனித்திறமை இனங்காண்ப்பட்டு அண்அர்கள் அந்தத துறையின் பால் நகர்த்தப்படும்போது அவர்களும் வல்லமை மிக்கவர்களாக மாறுவர். – எனக் குறிப்பிட்டார்.



# தமிழ்தேசிய கட்சிகள் ஏமார்ந்துவிடக்கூடாது மக்களின் தீர்வுக்காக ஒன்றிணையவேண்டும்!

## எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை



தமிழ்த்தேசியக் கட்சிகள் பேச்சு என்ற மாயைக்குள் ஏமார்ந்து விடாது தமிழ்மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலான பேச்சாக அதனை மாற்றி அமைக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68 ஆவது பிறந்த தினம் நேற்று (சனிக்கிழமை) வல்வெட்டிதுறையிலுள்ள தலைவர் பிரபாகரனின் வீட்டின் முன்பாக வெடிகொளுத்தி, எள்ளுப்பாகு வழங்கி கொண்டாட்டப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குத் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்த நோக்கத்துக்காக விடுதலைப்போர் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்காகத் தமது உயிர்களை ஈந்தவர்களை நினைவில் கொண்டு அதனை அடையக் கூடிய வகையில் சுதந்திரமான வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் நடத்தப்பட வேண்டும். தலைவர் பிரபாகரன் பிறந்த தினத்தில் திட சங்கர்ப்பமாக ஓர் இனம் தங்கள் தலைவிதியை தாங்களே நிர்வகிக்கின்ற உரிமையை நிலைநாட்டவேண்டும்.

இதற்கு வடக்கு –கிழக்கு மாநிலங்களில் சர்வஜன வாக்கெடுப்பு புலம்பெயர் தமிழர்களும் பங்குபற்றக்கூடிய வகையில் நடத்தப்படவேண்டும். இதனைத்தான் பிரபாகரனின் 68 ஆவது பிறந்த தினத்தில் எடுத்துக்கூறவிரும்புகின்றோம். இதைவிடுத்து, அரசாங்கம் தீர்வு தருவார்கள் ,பேசுவார்கள் என்று ஏமாந்தது போதும். 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்பாகத் தீர்வு காண்போம் எனக் கூறுவது ஏன் என்பது புரியவில்லை. இதில் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஏமாந்து விடக்கூடாது .தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து அதற்கான தீர்வுகளைப் பேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. நாங்கள் ஒன்றிணைவதே காலத்தின் தேவையாகவுள்ளது. – என்றார்.

# மாவீரர்களின் பெற்றோருக்கு சுப்பர் மடத்தில் கௌரவிப்பு!



யாழ்.பருத்தித்துறை – சுப்பர்மடத்தில் பொது மக்களால் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று (சனிக்கிழமை) சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய இசையுடன் மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்துவரப்பட்டு அங்கு மாவீரர்களின் திருவுருவ படங்களுக்கு ஈகைச்சுடாகள் ஏற்ப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடாந்து அங்கு மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# ஐஸ், ஹெரோயினுடன் யுவதி சம்மாந்துறையில் கைதானார்



போதைப் பொருள்களுடன் 27 வயதையுடைய பெண் ஒருவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் ஜனோசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜே.ரத்நாயக்கவின் வழிகாட்டலின் அடிப்படையில் போதைப் பொருள் விற்பனை இடம்பெற்ற வீட்டை சுற்றி வளைத்து திருமணமான 27 வயதுடைய பெண் ஒருவரைப் போதைப் பொருட்களுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண்ணிடம் 11 கிரோமும் 50 மில்லி கிராம் எடையுடைய ஐஸ் போதைப் பொருளையும், 435 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் கே. சதீஷ்கர், பொலிஸ் சார்ஜன்ட் குமாரசிங்க, பொலிஸ் கான்ஸ்டபில் கௌதம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

# அளவுக்கு அதிகமாக தங்க நகைகளை அணிந்து கொண்டு இலங்கைவர தடை!

பயணிகள் அளவுக்கு அதிகமாக தங்க நகைகளை அணிந்து கொண்டு நாட்டுக்குள் நுழைய தடை விதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் வருவதற்கு முன்னர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் ஜெனரலிடம் அனுமதி பெற்றால் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் தங்கம் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் பயணிகள் தங்க நகைகள் அணிந்து வருவதற்கு தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு அல்லது சாதாரண பயணிகளுக்கு இந்த புதிய கட்டுப்பாடு பொருந்தாது என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

# 2 லட்சத்து 31 ஆயிரத்து 982 பரீட்சார்த்திகள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்!

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய 2 லட்சத்து 31 ஆயிரத்து 982 பரீட்சார்த்திகள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். மேலும் 9 பாடத்திலும் 'ஏ' சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 863 என பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் அறிவித்துள்ளார்.

# சம்மாந்துறையில் போதைப் பொருள்ளுடன்; 27 வயது உடைய பெண் ஒருவர் கைது!

போதைப் பொருள்களுடன் 27 வயது பெண் ஒருவர் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளார்.

வெள்ளிக்கிரைத கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் போதைப் பொருள் விற்பனை இடம்பெற்ற வீட்டை சுற்றி வளைத்தனர்.

இதன்போது திருமணமான 27 வயதுடைய பெண் ஒருவரை போதைப் போருள்களுடன் கைது செய்துள்ளனர்.

அந்தப் பெண்ணிடம் 11 கிரோமும் 50 மில்லி கிராம் எடையுடைய ஐஸ் போதைப் பொருளையும், 435 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றினர். மேலும் சந்தேக நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தம் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான செயலமர்வு!

பெண்கள்மற்றும்சிறுமிகளுக்குஎதிரானவன்முறைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்கான 16 நாள் செயல் முனைவின் ஓர் அங்கமாக ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) திருகோணமலையில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பினரால் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி பிராந்தி உதயகுமார், மேலதிக மாவட்ட செயலாளர் அருள்ராஜ், பட்டணமும் சூழலும் பிரதேச செயலக மேலதிக பிரதேச செயலாளர் குணதிலக, பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான உப பொலிஸ் பரிசோதகர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## மாவீரர் வளைவு……


















(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல் விடுத்துள்ளதோடு நினைவு வளைவுகளையும் கொடிகளையும் அறுத்தெறிந்து அட்டாகாசம் புரிந்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் ஏற்பாடுகளை செய்து கொண்டு மக்கள் நின்றவேளை அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் நுழைவாயில் வளைவு மற்றும் கொடிகள் என்பனவற்றை அறுத்தெறிந்து அட்டகாசம் புரிந்துள்ளதோடு கைதுப்பாக்கியையும் எடுத்து ஏற்பாடுகளை செய்தவர்களை சுடுவோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர். மேலும் அனைத்துப் பொருட்களையும் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அத்தோடு அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நேற்றிரவு சென்ற பொலிஸார் வாயிலில் கட்டியிருந்த பதாதைகளைக் கழட்டிச் சென்றுள்ளதோடு எற்பாடுகளைச் செய்தவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்வோம் எனவும் முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு நகர கடற்கரை துயிலும் இல்லங்களுக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் நினைவு நிகழ்வில் மாவீரர் நாள் என எழுதிய பதாதையோ, நினைவு வளைவோ அல்லது பாடல்களோ ஒலிபரப்பினால் கைது செய்வோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

## முதல் மாவீரரான……..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை கப்பல் மலையில் உள்ள அவரது வீட்டில் இன்று மாவீரர் பண்டிதரின் தாயார் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

## பண்டிதருக்கு……..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடரேற்றினார். அச்சுவேலிப் பகுதியில் 1985ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில், விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப்டன் ப.இரவீந்திரன் (பண்டிதர்) வீரச்சாவு அடைந்தார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2022 இல் வெளியிடப்பெற்றது.